பக்கங்கள் 16

# மாலை முரசு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 புரட்டாதி 17 புதன்கிழமை 04.10.2023 அதிர்வு 65







# நீதி கோரி யாழ்ப்பாணத்தில்

# மனித சங்கிலிப் போராட்டம்





-எஸ்.நிதர்ஷன், பிரபாகரன் டிலக்சன்-

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி ரி.சரவணராஜாக்கு இழைக்கப்பட்ட அநீதிக்குக் கண்டனத்தை வெளிப் படுத்தும் வகையிலும், தமிழ் பேசும் மக்களை இலக்குவைத்துத் தொடரும் பேரினவாத அடக்கு முறைகளுக்கு எதிராகவும் யாழ்ப் பாணத்தில் இன்று மனித சங்கி லிப் போராட்டம் முன்னெடுக்கப் பட்டது.

மருதனார்மடத்தில் ஆரம்பித்து யாழ்ப்பாணம் நகர் வரையில் நீளு கின்ற போராட்டமாக இது நடை பெற்றது.

04

## நீதி தேவதையிடம் மண்டியிட்ட போராட்டக்காரர்கள்

*- எஸ்.நிதர்ஷன், பிரபாகரன் டிலக்சன் -*

யாழ்ப்பாணத்தில் இன்று போராட்டக்காரர்கள் நீதி தேவதையிடம் மண்டியிட்டு நீதிபதிக்கு நீதி கோரினர்.

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி ரி.சரவணராஜாக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், நீதி கோரியும் யாழ்ப்பாணத்தில் இன்று மனித சங்கிலிப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

அதன்போது கொக்குவில் சந்தியில் போராட்டத் தில் ஈடுபட்ட சட்டத்தரணிகள் உள்ளிட்டோர், 04



AARI WORK, SAREE BLOUSE AND SHALWAR வகுப்புகளுக்கு



புதிய மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படும்

இலங்கையில் பிரசித்திபெற்ற தையல் கலைஞர் Shamala Jayaratnam அவர்களால் October மற்றும் November மாதங்களில்

Aari work Saree Blouse Shalwar

வகுப்புகள் கனடாவில் நடாத்தப்படவுள்ளன.

Whatsapp +1 (647) 856-6080



Chinese Cultural Centre Of Greater Toronto, (Parking Lot Entrance via Progress Ave), 5183 Sheppard Ave E, Scarborough, Ontario - M1B 5Z5

# யாழ். மனித சங்கிலிப் போராட்டம்



















(படங்கள்:- எஸ்.நிதர்ஷன், பிரபாகரன் டிலக்சன்)







# யாழ். மனித சங்கிலிப் போராட்டம்







(படங்கள்:- எஸ்.நிதர்ஷன், பிரபாகரன் டிலக்சன்)











# யாழில் போராட்டக்காரர்களைப் படம் எடுத்த பொலிஸார்



**- எஸ்.நிதர்ஷன், பிரபாகரன் டிலக்சன் -**

யாழ்ப்பாணத்தில் இன்று மனித சங்கிலிப் போராட்டத்தில் ஈடுபட்ட வர்களைப் பொலிஸார் தமது கைய டக்கத் தொலைபேசிகளில் புகை-ப்படம் மற்றும் காணொலிகளை எடுத்த னர்.

முல்லைத்தீவு நீதிபதி விவகாரத்தில் கண்டனத்தை வெளிப்படுத்தும் வகை யில் யாழ்ப்பாணத்தில் மனித சங்கி லிப் போராட்டம் இன்று முன்னெடுக்கப் பட்டது.

மருதனார்மடத்தில் ஆரம்பித்து யாழ்ப்பாணம் நகர் வரையில் நீளு கின்ற போராட்டமாக இது முன்னெடுக்கப் பட்டது. அதன்போது வீதியில் போக்கு வரத்து ஒழுங்குகளைச் சீர் செய்யாது, போராட்டத்தில் ஈடுபட்டவர்களைப் புகைப் படம் மற்றும் காணொலி எடுப்பதில் போக்குவரத்துப் பிரிவு பொலிஸார் ஆர்வமாக ஈடுபட்டிருந்தனர்.

# நீதி கோரி யாழ்ப்பாணத்தில் மனித சங்கிலிப் போராட்டம்










**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

இந்தப் போராட்டம் மருதனார்மடம் சந்தியில் காலை 9:30 மணியளவில் ஆரம்பமானது. சமநேரத்தில் கொக்கு வில், கோண்டாவில் போன்ற பகுதிக ளிலும் போராட்டம் ஆரம்பிக்கப்பட் டது.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி, தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ), ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழ்த் தேசியக் கட்சி, தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (புளொட்), தமிழ் மக்கள் கூட்டணி மற்றும் ஜனநாயக போராளிகள் கட்சி என்பனவற்றின் ஏற்பாட்டிலும் ஆதரவுட னும் இந்த மனித சங்கிலிப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மற்றும் புதிய ஜனநாயக மார்க்சிச லெனி னிசக் கட்சி என்பனவும் இந்தப் போராட்டத் துக்கு ஆதரவை வழங்கின.

நாடாளுமன்ற உறுப்பினர்களான தர்மலிங்கம் சித்தார்த்தன், சி.வி.விக்னேஸ் வரன், முன்னாள் நாடாளுமன்ற உறுப் பினர்களான மாவை சேனாதிராஜா, சுரேஷ் பிரேமச்சந்திரன், எம்.கே.சிவாஜி லிங்கம், வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சி.வி.கே. சிவஞானம், முன்னாள் யாழ்ப்பாணம் மாநகர மேயர் வி.மணிவண்ணன், முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான சட்டத் தரணி கே.சயந்தன், து.ரவிகரன், க.சர்வேஸ்வரன், பா.கஜதீபன், எஸ். சுகிர்தன் மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் க.சுகாஷ், புதிய ஜனநாயக மார்க்சிச லெனி னிசக் கட்சியின் பொதுச்செயலாளர் சி.கா.செந்திவேல் உள்ளிட்ட அரசியல் பிரமுகர்கள், சட்டத்தரணிகள், மதத்தலை வர்கள், யாழ். பல்கலைக்கழக சமூகத்தி னர், வர்த்தக சங்கத்தினர், பொதுமக்கள் உட்படப் பலரும் இந்தப் போராட்டத்தில் கலந்துகொண்டனர்.

## நீதி தேவதையிடம் மண்டியிட்ட...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

நீதி தேவதையின் உருவச் சிலைக்குக் கறுத்தத் துணி கட்டி, நீதி தேவதையின் கையில் உள்ள தராசு ஒரு பக்கமாகத் தாழ்ந்து இருக்கக் கூடியவாறு, நீதி தேவதையின் உருவ சிலையைக் காட்சிப் படுத்திப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பின்னர் சட்டத்தரணிகள், அரசியல் வாதிகள் எனப் போராட்டத்தில் கலந்து கொண்டோர் நீதி தேவதையின் உருவச் சிலைக்கு முன் மண்டியிட்டு நீதி கோரினர்.

# சிறுவர் பூங்காவுக்கான காணியில் சமுர்த்தி வங்கிக்கு இடம் ஒதுக்கீடு!

## சாவகச்சேரி நகரசபையின் முன்னாள் உறுப்பினர்கள் எதிர்ப்பு

(த.சுபேசன்)

சாவகச்சேரி நகரசபையால் நுணாவில் பகுதியில் சிறுவர் பூங்கா அமைப்பதற்கென கொள்வனவு செய்த காணியின் ஒரு பகுதியில் சமுர்த்தி வங்கிக்கு கட்டடம் அமைப்பதற்கு எடுக்கும் முயற்சிக்கு நகரசபையின் முன்னாள் உறுப்பினர்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

அண்மையில் சாவகச்சேரி நகரசபை மண்டபத்தில் இடம்பெற்ற மக்கள் பங்கேற்புடனான அபிவிருத்தித்திட்ட கலந்துரையாடலின் போதே நகரசபையின் முன்னாள் உறுப்பினர்களான நடனதேவன், தர்ஷன் மற்றும் விஜயேந்திரன் ஆகியோர் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தியிருந்தனர்.

இது தொடர்பாக அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில் –

சாவகச்சேரி நகரசபை சபைத் தீர்மானத்துக்கு அமைய மக்களுடைய வரிப்பணத்தில் சிறுவர் பூங்கா அமைக்கவென காணி கொள்வனவு செய்தது.

அந்தக் காணியில் தற்போதைய பெறுமதியில் சுமார் ஒரு கோடி பெறுமதியான விளையாட்டு உபகரணம் ஒன்று வைக்கப்பட்டு எந்தவிதமான பயன்பாடும் இன்றிக் காணப்படுகிறது.

அண்மையில் அந்த பெறுமதியான விளையாட்டு உபகரணம் மீது பனை மரம் முறிந்து விழுந்து அதன் ஒரு பாகமும் சேதமடைந்து விட்டது.

சிறுவர் பூங்காவை திறப்பதற்கான நடவடிக்கையை நகரசபை நிர்வாகம் இதுவரை முன்னெடுக்கவில்லை. மக்கள் பிரதிநிதிகளைக் கொண்ட சபை கலைந்த பின்னர் நகரசபை எந்தவிதமான அபிவிருத்தியையும் முன்னெடுக்கவில்லை.

இந்த நிலையில் சபை கொள்வனவு செய்த சிறுவர் பூங்கா காணியை அரசியல் அழுத்தத்தை பிரயோகித்து சமுர்த்தி வங்கிக்கு வழங்கும் முயற்சி இடம்பெறுகின்றது.

முன்னாள் சபை உறுப்பினர்களுக்குத் தெரியாமல் காணி சமுர்த்தி வங்கிக்கு வழங்கப்பட்டு விட்டதா என்று கூட எமக்குத் தெரியாது.

மக்கள் பிரதிநிதிகளைக் கொண்ட சபை இதுவரை காலமும் வழங்காமல் வைத்திருந்த காணியை நான்கு மூடிய சுவருக்குள் பேசித் தீர்மானித்து விட்டு இன்னொரு அரச திணைக்களத்துக்கு வழங்குவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

நகரசபை நிர்வாகம் மீது அரசியல் அழுத்தம் என்றால் அதனை வெளியே கூற வேண்டும். இல்லையேல் பதவியை விட்டுச் செல்ல வேண்டும்.

இருபதாயிரம் மக்கள் பயனடையக் கூடிய சிறுவர் பூங்கா காணியை வேறு திணைக்களத்துக்கு வழங்க முடியாது.– என்று தெரிவித்தனர்.

முன்னாள் உறுப்பினர்களின் கருத்துகளுக்கு நகரசபைச் செயலாளர் அ.சீராளன் பதிலளிக்கையில் –

சிறுவர் பூங்கா காணியின் ஓர் பகுதியை சமுர்த்தி வங்கிக்கு வழங்கும் விடயத்தில் வடக்கு மாகாண ஆளுநரே முடிவெடுத்திருந்தார்.

ஆளுநரின் கோரிக்கையை மறுக்க முடியாமலும் – நகரசபைக்கு அருகில் நகர சபைக்குத் தேவைப்பாடாக இருக்கும் அரச காணியை பாதுகாக்கும் பொருட்டுமே சிறுவர் பூங்கா காணியை வழங்கச் சம்மதித்தோம். சம்மதிக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டு விட்டது. இதற்கு மேல் இந்த விவகாரம் தொடர்பாக என்னிடம் பேசிப் பயனில்லை.–என்றார்.

# காணி அபகரிப்புச் செயற்பாடுகள் உடன் நிறுத்தப்படுதல் வேண்டும்!

## நாடாளுமன்றில் தௌபீக் எம்.பி. தெரிவிப்பு

(நூருல் ஹுதா உமர்)

காணி அபகரிப்புகள் நிறுத்தப்பட வேண்டும். திருகோணமலை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் காணிப் பிரச்சினையானது எல்லா பிரதேசத்திலும் காணப்படுகிறது.

கடந்த வாரம் புல்மோட்டை பிரதேசத்தில் அந்த மக்களுக்குச் சொந்தமான காணிகள் தொல்பொருள் திணைக்களத்துக்குச் சொந்தமானது என்று வர்த்தமானி வெளியிட்டு அக்காணிகளை அபகரிப்பதற்கு முயற்சிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு சட்டவிரோத காணி அபகரிப்பு செயற்பாடுகளை உடன் நிறுத்த வேண்டும் என்று திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ் தௌபீக் நேற்று செவ்வாய்க்கிழமை (03) நாடாளுமன்றத்தில் உரையாற்றும் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்–

இவ்வாறான சட்டவிரோத காணி அபகரிப்புக்கள் தொடர்பில் நாங்கள் காணி அமைச்சர், பிரதமர் மற்றும் ஜனாதிபதி என்று எல்லா உயர்மட்டங்களுக்கும் தெரிவித்துள்ளோம். இதுவரையில் எந்த பிரச்சினைகளும் தீர்க்கப்படவில்லை.



இந்த நாட்டின் ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டுசென்றும் இப்பிரச்சினையை தீர்க்கமுடியவில்லையாயின் இதை நாங்கள் யாரிடம் சென்று தீர்ப்பது.

மக்கள் யுத்தம், சுனாமி போன்றவற்றால் பாதிக்கப்பட்ட வறுமைக் கோட்டுக்கு உட்பட்டவர்கள். அப்பாவி மக்களுடைய காணிகளே அபகரிக்கப்பட்டுள்ளன. இப்படியான அநியாயங்கள் நடக்கும் போதும் சட்டம் சரியாக அமுல்படுத்தப்படவில்லை.

அதேபோல், கிண்ணியா பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட சில காணிகள், முத்துநகர், கப்பல்துறை போன்ற காணிகளில் ஆரம்பத்தில் மக்கள் விவசாயம் செய்த போதிலும் பிறகு அது துறைமுக அதிகார சபைக்கு வழங்கப்பட்டுள்ளது.

இதில் பல பிரச்சினைகள் காணப்படுகின்றன. எனவும் இப் பிரச்சினைகளை அரசு தீர்த்துத்தர வேண்டும்.– என்றார்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# இனியாவது ஒரு விதி செய்வோம்!

தோல்விகளைக் கண்டு துவண்டு விடத் தேவையில்லை. அவைதான் வெற்றி என்ற ஏணியின் படிக் கற்கள். போராட்டக் களத்தில் பல தோல்விகளை எதிர்கொண்டபடிதான் நாம் முன்னேற வேண்டும். அது தவிர்க்க முடியாதது.

யாழ். நகரில் இன்று இடம்பெற்ற மனித சங்கிலிப் போராட்டம், அதற்கு நமது ஊடகங்களும், அரசியல் தரப்புகளும் கொடுத்த முக்கியத்துவத்துக்குரிய அளவில் மக்களின் பிரதிபலிப்பை - வரவேற்பை - பெறவேயில்லை. அந்த உண்மையை ஒப்புக்கொண்டு தானாக வேண்டும்.

இன்றைய மனித சங்கிலிப் போராட்டத்திற்கு ஏற்பாட்டாளர்கள் திட்டமிட்டபடி - அறிவித்தபடி - மருதனார்மடத்திலிருந்து யாழ்ப்பாணம் முட்டாசுக் கடைச் சந்தி வரை, காங்கேசன்துறை வீதியில் மக்கள் மனித சங்கிலியாகக் கைகோர்த்து நிற்பதாயின் சுமார் பத்தாயிரம் பேராவது அதற்காக வீதிக்கு இறங்கியிருக்க வேண்டும். அல்லது இறக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் இந்த இரண்டு புள்ளிகளுக்கும் இடையில், ஆங்காங்கே இரண்டு, மூன்று முக்கிய சந்திகளை ஒட்டி, மனித சங்கிலி வரிசையில் ஒன்று கூடியவர்கள் ஒரு சில நூறு பேர்தான். எதிர்பார்க்கப்பட்ட சனக் கூட்டத்தில் ஐந்து வீதமாவது வந்ததா என்பது சந்தேகம்தான். அதற்குக் காரணங்கள் பலவுண்டு.

ஆனால், இதற்காகத் தமிழ்த் தேசியத் தரப்புகள் துவண்டு விடத் தேவையில்லை. இதை ஓர் ஆக்கபூர்வமான ஆரம்பப் புள்ளியாகக் கொண்டு, தமிழ்த் தேசியத்தை பேணி, அழிய விடாமல் நிலைநிறுத்துவதற்கான பயணத்தில் நீண்ட தூரம் செல்ல வாய்ப்பு கிட்டியிருப்பதாகக் கருதி முன்னேற முயற்சிக்க வேண்டும். தளராது முயற்சிக்க வேண்டும்.

தமிழ்த் தேசியக் கட்சிகளும், தலைவர்களும், தரப்புக்களும் தங்களை சுய விமர்சனத்திற்கு உள்ளாக்கவும், தங்களின் மக்கள் செல்வாக்கையும், மக்கள் மீதான தங்களின் ஆகர்ஷிப்பு வலுவையும் அவரவர்கள் சுயமதிப்பீடு செய்து கொள்ளவும் புதிய சந்தர்ப்பமாக இதனைப் பயன்படுத்த வேண்டும்.

தமிழ்த் தேசியக் கட்சிகளின் ஐக்கிய செயற்பாடு என்பது வெறுமனே பொதுமேசையில் ஒன்றாக அமர்வது மட்டுமல்ல, பொதுவான அறிக்கைகள் - கண்டனங்கள் - கடிதங்களில் ஒன்று சேர்ந்து வரிசையாக ஒப்பமிடுவது மட்டுமல்ல, அதையும் தாண்டி ஒன்றித்துக் காரியமாற்றுவதாகும்.

எது, எப்படியோ தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒன்றுபட்டுச் செயல்படுவதற்கான ஒரு தளம் - தடம் - திறக்கப்பட்டிருக்கிறது. அந்தப் போராட்டத்தில் செந்திவேலின் மார்க்சிய, லெனினிஸக் கட்சி போன்றவை கலந்து கொண்டுள்ளன. தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் போன்ற பல முக்கிய தரப்புகள் இன்னும் உள்வாங்கப்படவில்லை.

அவற்றை எல்லாம் சேர்த்து , இனியாவது வீறு கொண்டு முழு அளவில் செயல்பட கூடிய புதிய பாதையை தமிழ்த் தேசியத் தரப்புகள் வகுத்துக் கொள்வது இன்றைய காலத்தின் கட்டாயம். தவறினால் தமிழ்த் தேசியம் பற்றி பேசுவது அபத்தமாகிவிடும்.





# ஓய்வு நிலையில் கௌரவிப்பு!

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

கல்முனை அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலையில் ஆரம்பக் கல்வி ஆசிரியையாக கடமையாற்றிவந்த திருமதி நபீமா பளீல் கடந்த திங்கட்கிழமை முதல் (02) தனது 31 வருடகால ஆசிரியர் சேவையிலிருந்து ஓய்வு பெற்றார்.

ஆசிரியையின் 31 வருட சேவையைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு சாய்ந்தமருது ஜீ.எம்.எம்.எஸ். பாடசாலையின் ஆசிரியர் நலன்புரி அமைப்பால் அதிபர் எம்.ஐ.எம். இல்லியாஸின் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது நினைவுச்சின்னம் மற்றும் அன்பளிப்புகள் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

# ஏறாவூர் ஆஸ்பத்திரியில் சிறுவர், முதியோர் நிகழ்வு



(கே. எ. ஹமீட் )

சர்வதேச சிறுவர், முதியோர் தின நிகழ்வுகள் ஏறாவூரில் நடைபெற்றன.

ஏறாவூர் சமூகநலன் அபிவிருத்தி ஒன்றியத்தின் ஏற்பாட்டில் அதன் தலைவரும் மட்டக்களப்பு மத்தி உதவிக் கல்விப்பணிப்பாளருமான ஏ.எம்.முபாஸ்தீன் தலைமையில் ஏறாவூர் ஆதார வைத்தியசாலையில் பல்வேறுபட்ட நிகழ்வுகள் நடைபெற்றன.

இதன்போது வைத்தியசாலையின் மருத்துவ நலன் தேவை கருதி ஒரு தொகுதி மருந்துப் பொருள்கள், விடுதி களுக்கு சுவர் கடிகாரங்கள் மற்றும் விடுதிகளில் தங்கியிருந்து சிகிச்சை பெற்றுவரும் சிறுவர்கள் மற்றும் முதியோர்களுக்கான அன்பளிப்பு பொருள்கள் என்பன சமூக நலன் அபிவிருத்தி ஒன்றியத்தின் உறுப்பினர்களால் வழங்கி வைக்கப்பட்டன.

நிகழ்வில் ஆதார வைத்தியசாலை வைத்தியர்களான ஏ.எல்.எவ்.பஜீரியா, எஸ்.எம்.பிர்னாஸ், சமூக நலன் அபிவிருத்தி ஒன்றியத்தின் உப தலைவர் ஐ.எம்.தசீர், செயலாளர் ஏ.ஆர்.எம்.வசீம் அக்ரம் மற்றும் விஷேட ஆலோசகர் அல்ஹாஜ் ஐ.எம்.ஜெமில் மற்றும் பாறூக் மௌலவி ஆகியோர் கலந்து கொண்டனர்.



# கழிவு நீரால் சுகாதாரச் சீர்கேடு: மாற்று நடவடிக்கை குறித்து ஆய்வு!

(பாறுக் ஷிஹான்)

வீட்டுத்திட்டத்தில் தேங்கி நிற்கும் கழிவு நீரால் ஏற்படும் சுகாதார சீர்கேடு தொடர்பில் ஆராயப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்டம் கல்முனை மாநகர சபைக்கு உட்பட்ட பெரிய நீலா வணை இஸ்லாமிக் ரிலீப் வீட்டுத் திட்டத் தில் தேங்கி நிற்கும் கழிவு நீரால் பாரிய சுகாதார சீர்கேடு நிலவுகிறது.

இதனால் மக்கள் எதிர்கொண்டுள்ள பிரச்சினை குறித்து ஆராயும் முகமாக நேற்றுச் செவ்வாய்க்கிழமை (03) நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.எம்.எம்.முஷாரப் விஜயம் செய்தார்.



கடந்த சுனாமி அனர்த்தத்தின் பின்னர் பாதிக்கப்பட்ட 96 குடும்பங்களுக்கு வழங்கப்பட்ட இஸ்லாமிக் ரிலீப் வீட்டுத் திட்டத்தில் 18 வருங்களாக முறையான வடிகான் இன்மையால் சமையலறைக் கழிவுநீர் குளியலறைக் கழிவுநீர் மற்றும் மலசலகூட கழிவுகள் போன்றவை வீட்டுத்திட்டத்தின் பின்புறங்களில் தேங்கி நிற்கிறது.

இதனால் நுளம்புகளின் பெருக்கம் அதிகரித்துக் காணப்படுகிறது.

இதற்கு மாற்றுப் பொறிமுறையை உருவாக்குவது தொடர்பாக ஆராயப் பட்டது.

களவிஜயத்தின் போது அம்பாறை மாவட்ட அரச அதிபர் சிந்தக அபே விக்ரம, அம்பாறை மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜய பத்ம, கல்முனை பிரதேச செயலாளர் ஜே.லியாகத் அலி, மாவட்ட செயலக திட்டமிடல் பணிப்பாளர் எச்.பி.அனிஸ் உள்ளிட்ட அரச அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

# இராம கிருஷ்ண மிஷனின் சத்சங்க நிகழ்வு நிந்தவூரில்!





(வி.ரி.சகாதேவராஜா)

இலங்கை இராமகிருஷ்ண மிஷனின் ஏற்பாட்டில் நிந்தவூரில் இடம் பெற்ற சத்சங்க நிகழ்வில் இலங்கை இராமகிருஷ்ண மிஷன் தலைவர் ஸ்ரீமத் சுவாமி அக்ஷராத்மானந்தா ஜீ மகராஜ் கலந்து கொண்டார்.

நிந்தவூர் ஸ்ரீ சிவ முத்துமாரியம்மன் ஆலயத்தில் இந்து இளைஞர் மன்றத் தின் அனுசரணையில் இந்தச் சத்சங்கம் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

சத்சங்க நிகழ்வுக்கு கொழும்பு இராம கிருஷ்ண மிஷன் தலைவர் ஸ்ரீமத் சுவாமி அக்ஷராத்மானந்ஜீ மகராஜ், மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தா ஜி மஹராஜ் ஆகியோர் வருகை தந்தனர். ஆலய வழி பாட்டையடுத்து சத்சங்கம் இடம்பெற்றது. அறநெறி மாணவர்களுக்கு பரிசுகளும் வழங்கி வைக்கப்பட்டன.

# தனியார் காணிகளில் வெடிபொருள்கள்!

(த.சுபேசன்)

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மிருசுவில் – கரம்பகம் பகுதியில் உள்ள இரு வேறு தனியார் காணிகளில் திங்கட்கிழமை (02) வெடிக்காத நிலையில் வெடிபொருள்கள் மீட்கப்பட்டுள்ளன.

ஒரு காணியில் கைக் குண்டு ஒன்றும், மற்றைய காணியில் மோட்டார் ஷெல் ஒன்றும் அடையாளம் காணப்பட்டுள்ளன.

காணி உரிமையாளர்கள் இது தொடர்பாக கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ள நிலையில் வெடிபொருள்களை அகற்றுவதற்கான நடவடிக்கைகளைப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.








புதிய மாணவர் அனுமதி - 2023 செப்டம்பர் நுழைவு

UNDERGRADUATE DEGREE PROGRAMMES
COMPUTING | BUSINESS

SLIIT NORTHERN UNI யின் நான்கு வருட பட்டப்படிப்புகள்.
தற்போது யாழ்ப்பாணத்தில்,
கல்வி அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டப்படிப்புகள்.

**BSc(Hons) in Information Technology Specialising in :**

- Information Technology
- Software Engineering
- Cyber Security
- Interactive Media
- Computer Systems & Network Engineering
- Information Systems Engineering
- Data Science

**BBA(Hons) Specialising in :**

- Business Analytics
- Marketing Management
- Accounting & Finance
- Logistics & Supply Chain Management

25% இற்கும் மேலான புலமை பரிசில்கள்

நினைவில் கொள்ள வேண்டிய திகதி

விண்ணப்ப முடிவுத்திகதி
5 OCT 2023

தகுதிகாண் பரீட்சை
7 OCT 2023
(10:30மு.ப to 11:30மு.ப)

மொழி மூலம்
தமிழ், ஆங்கிலம், சிங்களம்

SLIIT | NORTHERN UNI
Call us now:
077 147 1471
northernuni.lk
apply@northernuni.com

### நீதி துறைக்கு ஏற்பட்டுள்ள சவால்:

# மன்னாரில் ஒன்று திரண்ட சிவில் சமூக அமைப்புகள்!

**(மன்னார் நிருபர்)**

நாட்டில் நீதித்துறைக்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல் மற்றும் சவால்களுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் முகமாகவும் அதே நேரம் முல்லைத்தீவு நீதிவான் சரவணராஜாவுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு நியாயம் கோரியும் செவ்வாய்க்கிழமை (03) மன்னார் சிவில் சமூக அரசியல் பிரதிநிதிகள் கவனவீர்ப்பு ஒன்றை மேற்கொண்டிருந்தனர்.

மன்னார் நகர பேருந்து நிலையத்துக்கு முன்பாக ஒன்று கூடிய சிவில் சமூக மற்றும் அரசியல் பிரதிநிதிகள் இலங்கையில் தொடர்ச்சியாக சட்டத்துறை மற்றும் நீதித்துறை எதிர் கொண்டுவரும் அழுத்தங்கள் மற்றும் சவால்கள் உடனடியாக முடிவுக்கு கொண்டு வரப்பட வேண்டும் என்பதன் அடிப்படையில் தமது போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

அத்துடன் அரசு ஒவ்வொரு பிரச்சினைக்கும் அமைக்கும் விசாரணைக் குழுக்களில் தங்களுக்கு நம்பிக்கை இல்லை எனவும் சர்வதேச விசாரணை ஒன்றே எல்லாப் பிரச்சினைகளுக்கும் தீர்வு எனவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

நீதிபதி சரவணராஜாவுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு எதிராகவும் அதே நேரம் நீதித்துறையின் சுயாதீனத்தை பாதுகாப்பை உறுதிப்படுத்தக் கோரியும் விரைவில் மன்னாரில் போராட்டம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளனர் என்று போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்திருந்தனர்.

போராட்டத்தில் மெசிடோ நிறுவனத்தின் தலைவர் ஜாட்சன் பிகிறாடோ, மன்னார் நகரசபை முன்னாள் தலைவர் அன்ரனி டேவிட்சன், மன்னார் நகர சபை முன்னாள் உப தலைவர் ஜான்சன், சிவில் சமூக அமைப்பினர், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் முன்னாள் நகரசபை, பிரதேச சபை உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.





# சிறுவர் தினத்தில் மாம்பழ அறுவடை

**(பாறுக் ஷிஹான் )**

உலக சிறுவர் தினத்தை முன்னிட்டுக் கல்முனை அஸ்-ஸுஹ்றா வித்தியாலயத்தில் மாம்பழ அறுவடை நிகழ்வு பாடசாலை அதிபர் எம்.எச்.எஸ்.ஆர்.மஜிதிய்யா தலைமையில் இடம்பெற்றது.

சுமார் 100 இற்கும் அதிகமாக டொம்டேசி மாம்பழ இனங்கள் முதற்கட்டமாக விருந்தினர்களால் அறுவடை செய்யப்பட்டுக் காட்சிப்படுத்தப்பட்டன.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ் சஹுதுல் நஜீம், கௌரவ விருந்தினராகப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் எம்.எச்.எம்.ஜாபிர் ஆகியோரல் கலந்து கொண்டனர்.

பாடசாலையின் முன்னாள் அதிபர் ஏ.எல்.ஏ.கமால், பாடசாலை அபிவிருத்திச் சங்க நிறைவேற்றுக்குழு செயலாளர் பொறியியலாளர் எம்.ரீ.எம்.அனப், உறுப்பினர்களான ரீ.எம்.இர்பான், ஜே.எம்.ஜெஸீல் ஐ.எம்.சமீறுல் இலாஹி, பழைய மாணவர் சங்கச் செயலாளர் எஸ்.எச் எம் .அஜ்வத் , எம்.எம் முஹ்ஷீன், அபிவிருத்தி உத்தியோகத்தர் எல். நிஸான் அமீர் ஏ பாறூக், நாவதன்வெளி பிரதேச சபை முன்னாள் செயலாளர் எம். பி. அப்துல் றஹீம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# பாலர் பாடசாலையின் சிறுவர் நிகழ்வு

**(எம்.எஸ்.எம்.ஸாகிர்)**

கல்முனை இஸ்லாமாபாத் முஸ்லிம் வித்தியாலத்தின் ஒரு பகுதியாக இயங்கி வரும் கிறின் வீச் ஆங்கிலப் பாலர் பாட சாலையின் சிறுவர்தின நிகழ்வு நேற்று (03) அதன் நிறைவேற்றுப் பணிப்பாளர் எம். ஜுபிர் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பாடசாலையின் அதிபர் ஏ.ஜி.எம். நிசாத் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார். அத்தோடு பாடசாலையின் பிரதி அதிபர், பகுதித் தலைவர் களும் இந் நிகழ்வில் கலந்து கொண்டதுடன் உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு மாணவர்களுக்குப் பரிசில்களும் வழங்கப்பட்டன.











# வைத்திய முகாம்!

**(பழுவூரான்)**

மட்டக்களப்பு கல்லடி புதுமுகத்து வாரம் புனித இக்னேசியஸ் வித்தியாலய மாணவர்களின் சுகாதாரத்தை மேம்படுத்தும் வகையிலான வைத்திய முகாம் செவ்வாய்க்கிழமை (03) பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்த வைத்திய சிகிச்சையின் போது மட்டக்களப்பு பிராந்திய உதவி சுகாதார வைத்திய அதிகாரி திருமதி சோபனா இந்திரகுமார், மட்டக்களப்பு வைத்திய சாலையைச் சேர்ந்த பாடசாலைகளுக்கான பற்சிகிச்சையாளர் திருமதி எம்.எம்.ஈ. அகிலா மற்றும் கல்லடி பிராந்திய எஸ்.அமிர்தாப் ஆகியோர் கலந்து கொண்டு உடல், கண், காது, மூக்கு மற்றும் பல் தொடர்பாக பரிசோதனைகளை மேற்கொண்டனர்.

இதன் போது மட்டக்களப்பு பிரதேச உதவி சுகாதார வைத்திய அதிகாரியால் அன்றாடம் சூழலில் நிகழும் விபத்துக்கள் தொடர்பாகவும், அதிலிருந்து பாதுகாப்புப் பெறும் வழிகள் தொடர்பிலும் விரிவாக எடுத்துக் கூறப்பட்டது.




# சமாதான நீதிவான்கள் கலந்துரையாடல்

**(அ.அஸ்வர்)**

மட்டக்களப்பு மாவட்ட சமாதான நீதிவான்கள் சமூக மேம்பாட்டு மையத்தின் ஏற்பாட்டில் களுவாஞ்சிகுடி மற்றும் வெல்லாவெளி பிரதேச செயலகப் பிரிவுகளில் வசிக்கும் சமாதான நீதிவான்களுக்கான கருத்தரங்கு அண்மையில் இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட சமாதான நீதிவான்கள் சமூக மேம்பாட்டு மையத்தின் தலைவர் பாவலர் சாந்தி முகைதீன் தலைமையில் களுவாஞ்சிகுடி இராசமாணிக்கம் மண்டபத்தில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

இங்கு மையத்தின் உப தலைவரும் சட்டத்தரணியுமான அன்பழகன் குருஸ் செயற்பாட்டு விளக்க உரையை நிகழ்த்தினார்.

இதன்போது சமாதான நீதிவான்களின் நியமனம், வகைகள் மற்றும் பொறுப்புக்களும் கடமைகளும் என்பவை தொடர்பாக விரிவாக விளக்கமளிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் மையத்தின் நிர்வாக உறுப்பினர்கள் உட்பட மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த சமாதான நீதிவான்கள் பலரும் கலந்து கொண்டனர்.

# யானை தாக்கியதில் குடும்பப் பெண் பலி!

**(வி.ரி. சகாதேவராஜா, அஸ்ஹர் ஆதம்)**

சம்மாந்துறையில் நெய்னா காடு பிரதேசத்தில் காட்டு யானை தாக்குதலுக்கு இலக்காகி பெண் ஒருவர் பலியாகியுள்ளார்

சம்மாந்துறை நெய்னாகாடு வம்பியடி பிரதேசத்தில் நேற்று (03) இரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது என்று சம்மாந்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

இறக்காமம் பிரதேச செயலகத்திற்குட்பட்ட இறக்காமம் 9 ஆம் பிரிவைச் சேர்ந்த



புஹாரி சரீப் சிபானி (றிபானி) என்ற 43 வயதுடைய 3 பிள்ளைகளின் தாய் ஒருவரே இந்தச் சம்பவத்தில் உயிரிழந்துள்ளார். இது தொடர்பாக மேலதிக விசாரணைகளை சம்மாந்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# மத்திய முகாம் வைத்தியசாலைக்கு கல்முனை சுகாதார பணிப்பாளர்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி டாக்டர் ஐ.எல்.எம்.றிபாஸ், பிரதி பணிப்பாளர் டாக்டர் எம்.பீ.அப்துல் வாஜித், திட்டமிடல் பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.சீ.எம். மாஹிர், மற்றும் உயிரியல் மருத்துவ பொறியியலாளர் உள்ளிட்ட குழுவினர் மத்திய முகாம் பிரதேச வைத்திய சாலைக்கு விஜயம் மேற்கொண்ட னர்.

இந்த வைத்தியசாலை தொடர்பாகப் பொது மக்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற அபிப்பிராயங்கள் மற்றும் முறைப்பாடு களை பரிசீலிப்பதற்காகவும் அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பாக கவனம் செலுத் துவதற்காகவும் இவர்கள் இன்று விஜயம் மேற்கொண்டிருந்தனர்.

இதன்போது கலந்துரையாடலில் ஈடுபட்ட குழுவினர் வைத்தியசாலை உத்தியோகத்தர்கள் ஊழியர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகவும் கேட்டறிந்தனர்.

மத்திய முகாம் வைத்தியசாலையில் நீண்ட காலத் தேவையாக இருந்த மல்ரிபரா மொனிற்றர்' ஒன்றையும் இதன் போது பணிப்பாளர் வழங்கி னார்.

வைத்தியசாலை அபிவிருத்தி நலன் கருதி வைத்தியசாலை அபிவிருத்திக் குழுவை மறுசீரமைப்பது தொடர்பாகவும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டது.



# சிறுவர் தினத்தில் விழிப்புணர்வு!

(பழுவூரான்)

மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி சுதர்சினி ஸ்ரீகாந்தின் ஆலோசனை மற்றும் வழிகாட்டுதலின் கீழ் சர்வதேச சிறுவர் தினத்தினை முன்னிட்டு விழிப்புணர்வு நடவடிக்கை திங்கட்கிழமை (02) முன்னெடுக்கப் பட்டது.

மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சின் அறிவுறுத்தலுக்கமைய "குரல் கொடுங் கள் பிள்ளைகளை காப்பாற்றுங்கள்" எனும் தொனிப் பொருளில் விழிப்புணர்வு சுவர் ஒட்டிகள் மற்றும் துண்டுப் பிர சுரங்கள் வழங்கப்பட்டன.

இதன் போது இலங்கை பொதுப் போக்குவரத்து சபையின் பேருந்துகளில் சிறுவர் துஷ்பிரயோகத்தை தடுக்கும் வகையிலும், பொதுமக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக் கிலும் மாவட்ட செயலக சிறுவர் மற்றும் பெண்கள் பிரிவும், மண்முனை வடக்கு சிறுவர் பெண்கள் பிரிவும் இணைந்து ஸ்ரிக்கர்கள் ஒட்டப்பட்டன.

# மோட்டார் போக்குவரத்துப் பிரிவில் வெள்ளியன்று வாய்மொழிப் பரீட்சை

(அ.அஸ்வர்)

கிளிநொச்சி மாவட்ட மோட்டார் வாகன போக்குவரத்து பிரிவில் எழுதுதல் வாசித்தல் திறன் குறைந்தவர்களுக்கான வாய்மொழிப் பரீட்சையை நாளை மறுதினம் 6 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடத்துவதற்கு மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதுவரை சாரதி அனுமதிப்பத்திரம் பெறத்தவறியவர்கள் இந்தச் சந்தர்ப்பத்தை தவறவிடாது பயன்படுத்திக்கொள்ளுமாறு கிளிநொச்சி மாவட்ட மோட்டார் வாகன போக்குவரத்துப் பிரிவின் பிரதம மோட்டார் வாகன பரிசோதகர் ஜி.எச்.டி.கே.விஜயசேகர அறிவித்துள்ளார்.

இந்தப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு முன் கிளிநொச்சி பழைய கச்சேரி வளாகத்தில் அமைந்துள்ள மாவட்ட மோட்டார் வாகன போக்குவரத்துப் பிரிவின் மாவட்ட அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மாகாண தமிழ்த் தின போட்டி: கல்முனைக்கு 20 இடங்கள்!

(நூருல் ஹுதா உமர் )

அகில இலங்கை தமிழ் மொழித் தினப் போட்டிகளில் எழுத்தாக்கம் மற்றும் அரங்கப் போட்டிகளில் கல்முனை கல்வி வலயத்தில் இருந்து ஆறு போட்டிகள் தேசியமட்டத்துக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளன. அத்துடன் 20 போட்டிகளுக்கு மாகாணத்தில் முதல் மூன்று இடங்கள் கிடைத்துள்ளன என்று மாகாண தமிழ் மொழிப் பிரிவு அறிவித்துள்ளது.

முதலாம் இடம்– கட்டுரை – பிரிவு3 –அல்–அஸ்றக் மத்திய மகா வித்தியாலம் – எம்.எச்.பாத்திமா ஹப்னா, சிறுகதை ஆக்கம் –பிரிவு4 – இராம கிருஷ்ண மிஷன் பெண்கள் வித்தியாலயம் –ஆர்.மகோற்சபி, ஆக்கத் திறன் வெளிப்பாடு –பிரிவு1 –அஸ்–ஸபா வித்தியாலயம் – எஸ்.எச்.அம்மார், பேச்சு: – பிரிவு4 – அல்–ஹம்றா மகா வித்தியாலயம் – அப்துல் சமட் ஹயானி, பாவோதல் – பிரிவு4 –கார்மேல் பற்றிமா கல்லூரி –யு.அபர்ணசுவேர்தா, முஸ்லிம் நிகழ்ச்சி –அல்–அஷ்ரக் மத்திய மகா வித்தியாலயம்.

இரண்டாம் இடம் – குறுநாடக ஆக்கம் – என்.எம்.வாஇல் அர்ஹப், பிரிவு4 – ஸாஹிறா கல்லூரி–கல்முனை,எம்.பி.எம்.ஆதிப், கவிதை – பிரிவு4, ஸாஹிறா கல்லூரி, தமிழறிவு வினாவிடை– அல்–அஸ்றக் ம.ம.வி, நிந்தவூர், பாவாதல் பிரிவு3, கார்மேல் பற்றிமா கல்லூரி – அ.தேஷ்மி, இசை–தனி பிரிவு2 – இ.கி.மி பெண்கள் வித்தியாலயம் – க.வேகாத்மி, நடனம்–குழு 1, கார்மேல் பற்றிமா கல்லூரி, வில்லுப்பாட்டு – கார்மேல் பற்றிமா கல்லூரி.

மூன்றாம் இடம்– திறனாய்வு –பிரிவு 5 – அல்–பஹ்றியா ம.வி–கல்முனை எம்.ஜெ.பாத்திமா அமானா, பாவோதல் பிரிவு1, அஸ்–ஸபா வித்தியாலயம், ஏ.எச்.ஹனீப் முகம்மட், இசை–குழு1 இ.கி.மி. பெண்கள் வித்தியாலயம், நடனம்–தனி –பிரிவு3, கார்மேல் பற்றிமா கல்லூரி– சு.அகஸ்ரி, நாட்டிய நாடகம் கார்மேல் பற்றிமா கல்லூரி –இ.அசேதா, தமிழறிவு வினாவிடை அல்–அஷ்ரக் மத்திய மகா வித்தியாலயம் , சிந்து நடைக்கூத்து, காரைதீவு சண்முகா மகா வித்தியாலயம்.

ஒக்ரோபர் 28, 29 மற்றும் நவம்பர் 4,5 ஆம் திகதிகளில் தேசிய மட்டப் போட்டிகள் கொழும்பில் நடைபெறவுள்ளன.

# ‘வெய்யில் மனிதர்கள்’ நூல் அறிமுக விழா சனிக்கிழமை

(அ.அஸ்வர்)

சிரேஷ்ட ஒலி, ஒளிபரப்பாளரும் எழுத்தாளருமான அஷ்ரஃப் சிஹாப்தீன் மொழிபெயர்த்த ‘வெய்யில் மனிதர்கள்’ என்ற நூலின் அறிமுக விழா எதிர்வரும் சனிக்கிழமை (07) மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ளது.

மூத்த எழுத்தாளரும் மொழிபெயர்ப்பாள ருமான கவிஞர் அல் அஸுமத் தலைமையில் கொழும்பு தெமடகொட தாருல் ஈமான் மண்டபத்தில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக இலங்கைக்கான பலஸ்தீனத் தூதுவர் கலாநிதி ஸுஹைர் எச். எம். தார் ஸெய்த் கலந்து கொள்வார்.

விசேட அதிதிகளாக பலஸ்தீனத் தூதரகத்தின் முதலாவது செயலாளர் ஹிஷாம் அபூ தாஹா, முன்னாள் அமைச்சர் எம்.எஸ்.எஸ். அமீர் அலி, சிரேஷ்ட நிர்வாக அதிகாரி ஏ.பி.எம். அஷ்ரஃப் ஆகியோர் கலந்து கொள்ளவர்.

இங்கு நூல் பற்றிய திறனாய்வை சிரேஷ்ட ஒலி, ஒளிபரப்பாளர் இளைய தம்பி தயானந்தா, எழுத்தாளர் ஷாகிறா இஸ்ஸதீன், கவிஞர் நாச்சியாதீவு பர்வீன் ஆகியோர் நிகழ்த்துவர்.

முதற்பிரதியை பத்திரிகையாளரும் எழுத்தாளருமான பஷீர் அலி பெற்றுக் கொள்ளவர்.

விசேட பிரதியை இலங்கை நெய்னார் சமூக நலக் காப்பகத்தின் தலைவர் இம்ரான் நெய்னார் பெற்றுக் கொள்வார்.

பிரபல பலஸ்தீன எழுத்தாளரான கஸ்ஸான் கனஃபானி எழுதிய ‘அர்ரிஜாலு ஃபிஷ்ஷம்ஸ்’ என்ற அரபு மொழி நாவலின் ஆங்கில மொழி பெயர்ப்பைத் தழுவி இந்த நூல் தமிழில் மொழிபெயர்க்கப் பட்டுள்ளது.

2020 ஆம் ஆண்டு சிறந்த மொழிபெயர்ப்பு நாவலுக்கான அரச சாஹித்திய விருதை இந்த நூல் பெற்றுள்ளது.

இலங்கை நெய்னார் சமூக நலக் காப்பகம் இந்த அறிமுக விழாவுக்கான ஏற்பாட்டைச் செய்துள்ளது.



# தேசிய மட்ட ஒலிம்பியாட் போட்டிக்குத் தெரிவு!

(அஸ்ஹர் ஆதம் )

இறக்காமம் அல் அஷ்ரப் தேசிய பாடசாலை மாணவன் சமீர் அப்ரம் தகி தேசிய மட்ட விஞ்ஞான ஒலிம்பியாட் போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

தரம் 07 இல் கல்வி பயிலும் இவர் கடந்த 27 ஆம் திகதி திருகோணமலை சென் ஜோசப் கல்லூரியில் நடத்தப்பட்ட மாகாண மட்ட விஞ்ஞான ஒலிம்பியாட் தேர்வில் தேர்ச்சி பெற்று தேசிய மட்ட போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார்.



# சம்மாந்துறை ஆஸ்பத்திரியில் பாராட்டு!

(நூருல் ஹுதா உமர் )

உலக நோயாளர் பாதுகாப்பு தினத்தை முன்னிட்டுச் சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையில் பல்வேறு நிகழ்வுகள் இடம்பெற்றன.

வைத்திய அத்தியட்சகர் எம்.எச். எம்.ஆஸாத் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம்.றிபாஸ் பிரதம அதிதியாகவும், பிரதிப் பணிப்பாளர் டாக்டர் எம்.பீ.அப்துல் வாஜித் கௌரவ அதிதியாகவும், திட்டமிடல் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.சீ.எம். மாஹிர் விசேட அதிதியாகவும் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் விசேட வைத்திய நிபுணர்கள், வைத்தியர்கள், உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.



சுகாதார அமைச்சால் நடத்தப்பட்ட தேசிய கண்காணிப்பு செயல்முறையின் கீழ் நிறுவனங்களிடையே மேற்கொள் எப்பட்ட சிறந்த செயல் திறனுக்கான தேசிய மதிப்பியலில் வெளி நோயாளர் பிரிவைச் சிறப்பாக முகாமைத்துவம் செய்த சம்மாந்துறை ஆதார வைத்திய சாலை முதலாம் இடத்தை வகித்து அண்மையில் தேசிய விருதைப் பெற்றுக் கொண்டது.

இந்த விருதைப் பெறுவதற்காக அர்ப்பணிப்புடன் உழைத்த வைத்தியர்கள், வைத்தியசாலை உத்தியோகத்தர்கள் ஊழியர்கள் என பலரும் இந் நிகழ்வின் போது பாராட்டி கௌரவிக்கப் பட்டனர்.

# மயிலம்பாவெளியில் சிறுவர் தினம்!





(பழுவூரான்)

மட்டக்களப்பு மயிலம்பாவெளி உதவும் கரங்கள் அமைப்பால் முன்னெடுக்கப்பட்டுவரும் செயற்றிட்டத்தின் 2023 ஆண்டில் சர்வதேச சிறுவர் தினத்தை சிறப்பிக்கும் வகையில் உதவும் கரங்கள் சிறுவர் இல்லத்தில் சிறுவர் தின நிகழ்வுகள் ஞாயிற்றுக்கிழமை (01) இடம்பெற்றன.

உதவும் கரங்கள் அமைப்பின் தலைவர் சிரேஷ்ட விரிவுரையாளர் சதாசிவம் ஜெயராஜா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், சிறுவர்களின் கலை, கலாசார நிகழ்வுகள் இடம்பெற்றன. சாதனை படைத்த சிறுவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக வீதி அபிவிருத்தி அதிகார சபையின் நிறைவேற்றுப் பொறியியலாளர் எந்திரி அ. லிங்கேஸ்வரன், மட்டக்களப்பு தேசிய கல்வியற் கல்லூரி பீடாதிபதி த. கணேசரெத்தினம் ஆகியோரும், கௌரவ விருந்தினர்களாக வட்ஸ் அமைப்பின் தலைவர் எல். ஆர். டேவிட், கதிரவன் பட்டிமன்றப் பேரவைத் தலைவர் கதிரவன் த. இன்பராசா, கவிவாணர் கல்லூர் சாந்தி ஆகியோரும் கலந்து கொண்டனர்.

சட்டத்தரணி அன்பழகன் குரூஸ், தாய்சேய் நல சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் கி. கிரிசுதன், டாக்டர் திருமதி.கே. அகல்யா , டாக்டர் திருமதி லி. டுசித்ரா ஆகியோரும் வருகை தந்திருந்தனர்.

கனேடிய சி.ஆர்.இ.பி. அமைப்பின் நிதி உதவியில் கிழக்கு சமூக அபிவிருத்தி ஒன்றியத்தின் உதவும் கரங்கள் அமைப்பால் 'வழி தேடும் சிறுவர்களின் ஒளியாக மிளிர்வோம்' எனும் கருப்

# ராமர் பாலம் தொடர்பில் வழக்கு தாக்கல்: தள்ளுபடி செய்தது இந்திய உயர்நீதிமன்றம்



தமிழ்நாடு மற்றும் இலங்கைக்கு இடையில் அமைந்துள்ள ராமர் பாலத்தை பார்த்து வணங்கும் வகையில் சுவர் எழுப்ப வேண்டும் என கோரி தாக்கல் செய்த பொதுநலன் மனுவை இந்திய உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது.

தமிழ்நாட்டின் ராமேஸ்வரம் மற்றும் இலங்கைக்கு இடையே கடலில் சுண்ணாம்பு பாறை திட்டுகள் ஒரே தொடர்ச்சியாக அமையப்பெற்றுள்ளன.

இதனை புராண இதிகாசங்களுடன் தொடர்புபடுத்தி பல இலட்சம் ஆண்டு களுக்கு முன்னர் இராமரால் இலங்கைக்கு கட்டப்பட்ட பாலம் என கூறப்படுகிறது.

இதன் காரணமாக இதனை ராமர் பாலம் அல்லது ராம் சேது என அழைக் கின்றனர். ஆனால், அறிவியப்பூர்வமாக இது நிரூபிக்கப்படவில்லை.

இந்த நிலையில் சேதுக் கால்வாய் திட்டத்துக்காக இந்த பகுதியை ஆழப்ப டுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டன.

இதன்போது இராமர் பாலம் சேதம டைந்துவிடும் என கடும் எதிர்ப்பு தெரிவிக் கப்பட்டது. இந்த சர்ச்சையின் போதுதான் மறைந்த முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி, இராமர் எந்த பொறியியல் கல்லூரியில் படித்தார் என கேள்வி எழுப்பியிருந்தார்.

இதற்காக கருணாநிதி தொடர்பில் இந்து சாமியார் ஒருவர் தெரிவித்த கருத்து இந்தியா முழுவதும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது.

பின்னர் இராமர் பாலம் இருப்பதை காரணம் காட்டியே சேதுக்கால்வாய் திட்டம் கிடப்பில் போடப்பட்டு கைவிடப்பட்டது.

இந்த நிலையில் இராமர் பாலத்தை தேசிய புராதான சின்னமாக அறிவிக்க வேண்டும் என்பது தொடர்பாக பாரதீய ஜனதாவின் சுப்பிரமணியன் சுவாமி உள்ளிட்ட பலர் வழக்கும் தொடர்ந் திருந்தனர்.

அதனை தொடர்ந்து அண்மைக் காலத்தில் இந்து சட்ட ஆணையம் சார்பில் அசோக் பாண்டே என்பவர் உயர் நீதிமன்றத்தில் ஒரு வழக்கு தொடர்ந்தார்.

அதில், இராமர் பாலத்தை பொது மக்கள் வணங்கும் வகையில் சுவர் கட்டித்தர உத்தரவிட வேண்டும் என வலியுறுத்தப்பட்டிருந்தது.

இதனை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட நீதியரசர்கள், கட்டுமானப் பணி களை மேற்கொள்வதில் தலை யிடுவது எல்லாம் நீதிமன்றத்தின் பணியா? என கேள்வி எழுப்பினர். இது தொடர்பாக மத்திய அரசை அணுகலாம் எனவும் மனுதாரருக்கு அறிவுறுத்திய நீதியரசர்கள், இந்த பொதுநலன் மனுவை தள்ளுபடி செய்துள்ளனர்.

# நிர்மலாவுடன் அ.தி.மு.கவினர் சந்திப்பு: மீண்டும் கூட்டணியை ஏற்படுத்த முயற்சி!



அ.தி.மு.க. – பா.ஜ.க. இடையேயான பிளவை சரிசெய்ய தொடர்ந்து முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்று பா.ஜ.க. மாநில துணைத் தலைவர் வி.பி.துரைசாமி தெரிவித்துள்ளார்.

இந்த பின்னணியில் கோவையில் மத்திய அமைச்சர் நிர்மலா சீதாராமனை அ.தி.மு.கவின் எம்.எல்.ஏக்கள் சந்தித்து பேச்சு நடத்தியுள்ளனர். இது அரசியல் களத்தில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

மக்களவைத் தேர்தல் இன்னும் 6 மாதங்களில் வரவுள்ளது. இந்த நிலையில், பா.ஜ.கவை வீழ்த்த எதிர்க்கட்சிகள் அனைத்தும் ஒன்றாக இணைந்து இண்டியா என்ற கூட்ட ணியை அமைத்துள்ளன. பா.ஜ.க. தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணியில் உள்ள கட்சிகளை தக்க வைக்கவும், கூடுதலாக கட்சிகளை கூட்ட ணியில் சேர்க்கவும் பா.ஜ.க. தலைமை வியூகம் வகுத்து வருகிறது.

இந்த நிலையில், தமிழக பா.ஜ.க. தலைவர் அண்ணாமலையின் செயல் பாடுகள் சரியில்லை எனக் குற்றம்சாட்டி, தேசிய ஜனநாயகக் கூட்டணியில் இருந்து சமீபத்தில் அ.தி.மு.க. வெளியேறியது.

இந்த கூட்டணி முறிவை அ.தி.மு.க. மற்றும் பா.ஜ.கவில் முக்கிய நிர்வாகிகள் ஒரு தரப்பு விரும்பினாலும், மற்றொரு தரப்பினர் விரும்பவில்லை என்று கூறப்படுகிறது. கூட்டணியில் அ.தி.மு.க. வெளியேறியது கூட்டணியில் உள்ள மற்ற கட்சிகளிடையே சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது.

அதனால், அ.தி.மு.கவை மீண்டும் பா.ஜ.க. கூட்டணியில் சேர்க்கும் முயற்சி யில் இரு கட்சிகளைச் சேர்ந்த முக்கிய நிர்வாகிகள் ஈடுபட்டு வருகின்றனர்.

கூட்டணியில் உள்ள சில கட்சிகளை சேர்ந்தவர்களும் அந்த முயற்சியில் ஈடுபட்டுள்ளனர் என தெரிவிக்கப்படு கிறது.

ஆனால், பா.ஜ.கவுடன் கூட்டணி இல்லை என்ற முடிவில் அ.தி.மு.க. பொதுச்செயலாளர் பழனி சாமி உறுதியாக இருக்கிறார் என கூறப்ப டுகிறது. அதனை உறுதிப்படுத்தும் வகையில், நேற்று முன்தினம் சேலத்தில் கட்சியின் வாக்குச்சாவடி முகவர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் பேசும்போது, பா.ஜ.க. கூட்டணியில் இருந்து விலகியது தொண்டர்களின் முடிவு என்று பழனிசாமி தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில், நேற்று கோவையில் அரசு நிகழ்சிகளில் பங்கேற்க வந்த மத்திய அமைச்சர் நிர்மலா சீதாராமனை, அ.தி.மு.கவின் எம்.எல்.ஏக்கள் பொள்ளாச்சி ஜெயராமன், ஏ. கே.செல்வராஜ், அமுல் கந்தசாமி ஆகியோர் சந்தித்து பேசியுள்ளார்.

விவசாயிகள் பிரச்சினை தொடர்பாக சந்தித்தோம். கூட்டணி பற்றி பேசவில்லை என்று அ.தி.மு.கவின் எம்.எல்.ஏக்கள் தெரிவித்தாலும், இந்த சந்திப்பு அரசியல் களத்தில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# இத்தாலியில் பேருந்து விபத்து: சிறுவர்கள் உட்பட 21 பேர் பலி!




இத்தாலியின் வெனிஸ் நகரில் உள்ள பாலத்தில் இடம்பெற்ற பேருந்து விபத்தில் 21 பயணிகள் உயிரிழந்துள்ளனர்.

இதில் இரண்டு குழந்தைகள் மற்றும் வெளிநாட்டவர்கள் உட்பட 21 பேர் பலியாகியுள்ளனர். 18 பேர் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்கள் மீட்கப்பட்டு அருகில் உள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இருப்பினும் காயமடைந்தவர்களில் பலரது நிலைமை கவலைக்கிடமாக இருப்பதால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக் கூடும் என அஞ்சப்படுகிறது.



இந்த பேருந்து, வெனிஸ் நகருக்கு அருகே மெஸ்ட்ரே மாவட்டத்தில் உள்ள மேம்பாலத்தில் சென்றுகொண்டிருந்த போது மேம்பாலத்தின் சுவரை உடைத்துக் கொண்டு, ரயில் பாதைகளுக்கு அருகில் விழுந்து விபத்துக்குள்ளானது.

இருப்பினும் இந்த விபத்துக்கான காரணம் தற்போதுவரை வெளிவரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# காலிஸ்தான் குழுக்களை தடை செய்தது கனடா!




கனடாவில் இரண்டு காலிஸ்தான் குழுக்களை அந்த நாட்டு அரசாங்கம் தடை செய்துள்ளது என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கனடாவில் பாபர் குர்சா இன்டர்நேஷனல் மற்றும் சர்வதேச சீக்கிய இளைஞர் கூட்டமைப்பு ஆகிய இரண்டு காலிஸ்தான் அமைப்புகளே இவ்வாறு தடை செய்யப்பட்டுள்ளது.

எனினும், ஐந்து காலிஸ்தான் குழுக்களையும் தடை செய்ய வேண்டும் என்பது இந்தியாவின் நீண்ட நாள் கோரிக்கையாக இருந்தது வருகிறது.

உள்துறை அமைச்சகத்தின் புள்ளிவிவரங்களின்படி, கனடா, பாகிஸ்தான் மற்றும் ஐரோப்பாவில் சுமார் 11 காலிஸ்தான் பயங்கரவாதிகள் செயல்படுகின்றனர் என கூறப்படுகிறது.

இதற்கமைய ஜூன் 18 ஆம் திகதி காலிஸ்தான் பயங்கரவாதி ஹர்தீப் சிங் நிஜ்ஜார் கொல்லப்பட்ட பிறகு, கனடாவுக்கும் இந்தியாவுக்கும் இடையிலான தூதரக உறவுகளில் பாரிய விரிசல் ஏற்படத்தொடங்கியது.

இந்த நிலையில், கனடாவுக்கும் இந்தியாவுக்கும் இடையிலான இராஜதந்திர பிரச்சினைகளை இரு தரப்பினரும் இணைந்து தீர்க்க வேண்டும் என இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் நேற்று முன்தினம் தெரிவித்திருந்தார்.

எனினும், பயங்கரவாதம், தீவிரவாதம் மற்றும் வன்முறை மீதான கனடா அரசின் அணுகுமுறையே முக்கியப் பிரச்சினை என்று ஜெய்சங்கர் ஊடக சந்திப்பில் விமர்சித்திருந்தார்.

## இளவாலை வருத்தப்படாத வாலிப சங்க உதைபந்தாட்ட அரையிறுதி

# பாடும்மீனை 'பனால்டி'யில் வீழ்த்தியது சென். மேரிஸ்









இளைவாலை வருத்தப்படாத வாலிப சங்கம் நடத்திவரும் உதை பந்தாட்டச் சமரின் இரண்டாவது அரை யிறுதியாட்டத்தில் குருநகர் பாடும் மீன் அணியை வீழ்த்தி நாவாந்துறை சென். மேரிஸ் அணி இறுதியாட்டத்துக்குத் தகுதிபெற்றது.

இளவாலை வருத்தப்படாத வாலிப சங்கம், தமது 10ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு, அணிக்கு 09 பேர் கொண்ட "வாலிப கிண்ணம்" உதை பந்தாட்டத் தொடரை நடத்தி வருகின்றது.

இதன் இரண்டாவது அரையிறுதி யாட்டம் , நேற்று (03) இரவு 7.30 மணி யளவில் இளவாலை புனித ஹென்றி யரசர் கல்லூரி மைதானத்தில் நடை பெற்றது.

இந்த ஆட்டத்தில் குருநகர் பாடும் மீன் அணியை எதிர்த்து நாவாந்துறை சென். மேரிஸ் அணி மோதியது.

இரு அணிகளும் சம பலத்துடன் களமாடின. இதனால் ஆட்டம் சூடு பிடித்தது.

ஆட்டம் விறுவிறுப்பாக நகர்ந்து கொண்டிருந்தபோது, பாடும்மீன் அணி யின் முன்கள வீரர் ஹரிஸ் தனது அணிக் காக கோல் ஒன்றைப் போட முதல் பாதி யாட்டத்தில் பாடும் மீன் 1:0 என்ற கோல் கணக்கில் முன்னிலைபெற்றது.

பின்னர் இரண்டாவது பாதியில் சென். மேரிஸ் அணிக்கு 'பனால்டி' வாய்ப்புக் கிடைக்க, அதனை அந்த அணி கோலாக மாற்றியது.

அதைத் தொடர்ந்து சென். மேரிஸின் முன்கள வீரரான யேசுராஜ், தமக்குச் சாதகமாகக் கிடைத்த பந்தொன்றை கோலாக மாற்ற, சென்மேரிஸ் 2:1 என்ற கணக்கில் முன்னிலைபெற்றது.

ஆட்டம் நிறைவடையும் தருவாயை எட்டியபோது, பாடும் மீனுக்கு 'பனால்டி' வாய்ப்பு ஒன்று கிடைத்தது. அந்த வாய்ப்பைச் சரியாகப் பயன்படுத்திய அந்த அணி, கோல் ஒன்றைப் போட்டு ஆட்டத்தைச் சமநிலைக்குக் கொண்டு வந்தது.

இறுதியில் 2:2 என்ற கோல் கணக்கில் ஆட்டம் சமநிலையடைந்தது.

இதையடுத்து வெற்றியாளரைத் தீர்மானிப்பதற்காக 'பனால்டி' உதை வழங்கப்பட்டது.

இதில், நாவாந்துறை சென் மேரிஸ் அணி 5:4 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று, இறுதியாட்டத்துக் குத் தகுதிபெற்றது.

ஆட்ட நாயகனாக சென்மேரிஸ் அணியின் ஜெறின்சன் தெரிவு செய் யப்பட்டார்.

ஏற்கனவே நடந்து முடிந்த முதலா வது அரையிறுதியாட்டத்தில், சமனிலை தவிர்ப்பு 'பனால்டி' உதையில் இள வாலை யங்கென்றிசியன் அணியை வீழ்த்தி ஆனைக்கோட்டை யூனியன் அணி இறுதிப்போட்டிக்குத் தகுதி பெற்றது. இந்த அணியுடன் இறுதியாட் டத்தில், நாவாந்துறை சென்மேரிஸ் அணி மோதவுள்ளது.